BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

களவழி நாற்பதில் உரும் என்னும் உரிச்சொல்

ஆய்வாளர்
மு.விஜயலட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி - 626 123.

நெறியாளர்
முனைவர் ப. மீனாட்சி
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி - 626 123.

ஆய்வுச்சுருக்கம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களுள் சொல்லிலக்கணம் இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது. எழுத்துக்கள் இல்லையேல் சொற்கள் இல்லை. சொற்கள் இல்லையேல் மொழி இல்லை. எனவே, ஒரு மொழியின் வளர்ச்சிக்கு சொற்கள் இன்றியமையாததாகும். சொற்களை தொல்காப்பியர் பெயர், வினை, இடை, உரி என நால்வகைப்படுத்துகிறார். நால்வகைச் சொற்களுள் ஒன்றாகத் திகழும் உரிச்சொற்களுக்கு இலக்கணம் வகுத்து அச்சொற்களுக்காளப் பொருள்களையும் பட்டியலிடுகிறார். மேலும் உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பின் அடிப்படையில் பிறக்கும் என்ற கருத்தினையும் முன்வைக்கிறார். பதினெண் கீழ்க்கணக்கு புறநூலாகத் திகழும் களவழி நாற்பதில், தொல்காப்பிய உரிச்சொற்களும் தொல்காப்பியர் இலக்கண விதிகளின் படி அமைந்திருக்கின்ற புதிய உரிச்சொற்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் களவழி நாற்பதில் இடம்பெற்றுள்ள உரும் என்னும் சொல்லையும் அச்சொல் வருமிடங்களையும் அச்சொல் உணர்த்தும் பொருளினையும் ஆராய்வதாக அவ்ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்

உரிச்சொல், உரும், களவழி நாற்பது, குறிப்பு உரிச்சொல்

முன்னுரை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் புறம் சார்ந்த நூலாக களவழி நாற்பது விளங்குகிறது. சொற்கள் பல இணைந்தே சொற்றொடர்களை உருவாக்குகிறது. சொற்களை பெயர், வினை, இடை, உரி என தொல்காப்பியர் நால்வகைப்படுத்துவார். இசை, குறிப்பு, பண்பின் அடிப்படையில் உரிச்சொல் தோன்றும். 99 குறிப்பு உரிச்சொற்கள் தொல்காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. உரும் என்னும் உரிச்சொல் குறிப்பு உரிச்சொற்களுள் ஒன்றாக விளங்குகிறது. களவழி நாற்பதில் உரும் என்னும் உரிச்சொல் இடம்பெற்றுள்ள விதத்தினை ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியத்தில் உரிச்சொற்களுக்கான இலக்கணம்:

உரிச்சொல்லானது இசை, குறிப்பு, பண்பெனும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். பெயர் போலவும் வினை போலவும் தம் உருபு தடுமாறும். ஒரு சொல் பல பொருளைப் பெற்றும் பல சொல் ஒரு பொருளைப் பெற்றும் வரும். கேட்பவரால் பயிலப்படாத சொல்லைப் பயின்றப் பொருளோடு சார்த்திப் பொருளை உணர்த்தும். தமக்குரிய இயல்பில் நின்றும் தாம் பொருந்தி நிற்கும் பெயரும் வினையுமாகிய நிலைக்களன்களால் வேறுவேறு பொருள்களை உணர்த்தும் என்பதை கீழ்க்கண்ட நூற்பா உணர்த்துகிறது.

"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்"(தொல்(சொல்), சேனாவரையர்; ப.256)

முத்து வீரியமும் தொல்காப்பியமும் உரிச்சொல் குறித்து ஒரே விதமான கருத்துக்களைத் தெரிவிக்கிறது.

தொல்காப்பியர் பலரறிய வழங்கப்படும் உரிச்சொற்களை எடுத்துரைக்காமல், யாருக்கும் தெரியாத உரிச்சொற்களையும் அவற்றிற்குரிய பொருளினையும் மட்டுமே தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பதை,

"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன" (தொல்(சொல்), சேனாவரையர்; ப.257)

என்னும் நூற்பாவின் வழி அறிய முடிகின்றது. வழக்கில் பயன்படுத்தாத பலருக்குத் தெரியாத உரிச்சொற்களை மட்டுமே தொல்காப்பியர் விளக்குகின்றார்.

குறிப்பு உரிச்சொற்கள்

மனதால் குறித்து உணரப்படுவது குறிப்பாகும். குறிப்பு என்பதற்கு ந.சி.கந்தையா அகராதி "உள்ளக்கருத்து குறித்து உணரப்படுவது, மனநிலை, இங்கிதம், சைகை, பிறர் கருதியதைக் காணவல்ல அறிவு, அடையாளம், இலக்கு" (கந்தையா, 2014;194) ஆகிய பொருள்களைத் தருகின்றது. தொல்காப்பியத்தில் 96 குறிப்பு உரிச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

உரும் என்னும் குறிப்பு உரிச்சொல்

உரும் என்னும் கிளவி அச்சப்பொருளில் கையாளப்பட்டுள்ளதை தொல்காப்பியரின்,

"பேம்நாம் உருமென வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள" (தொல்(சொல்), சேனாவரையர்; ப.267)

என்னும் இந்நூற்பா விளக்குகிறது. களவழி நாற்பதில் உரும் என்னும் உரிச்சொல் நான்கு இடங்களில் கையாளப்பட்டுள்ளது.

உரும்

அழகிய மார்பினையும் வலிமை பொருந்திய தேரினையும் உடைய செங்கட்சோழன் பகைவர்களைக் கொன்ற போர்க்களத்தில், பல திசைகளிலும் இறந்த யானைகளின் பிணங்கள் அடுக்கப்பட்டு உயர்ந்து கிடந்தன. அவற்றைப் பார்ப்பதற்கு இடித்து முழங்கி வானத்தினின்று இடி வீழ்ந்து எவ்விடத்தும் பெருமலைகளை எறிந்தது போலக் கிடந்தன என்பதை,

"நானாற் றிசையும் பிணம்பிறங்க யானை
அடுக்குபு ஏற்றிக் கிடந்த – இடித்துரறி
அங்கண் விசும்பின் உருமெறிந்(து) எங்கும்
பெருமலை தூறெறிந் தற்றே அருமணிப்பூ
ணேந்து எழில்மார்பு இயல் திண்டேர்ச் செம்பியன்தெவ்
வேந்தரை அட்ட களத்து." (களவழி நாற்பது, 06)

என்னும் பாடல் புலப்படுத்துகிறது. இப்பாடலிலுள்ள உரும் என்னும் சொல் பிறருக்கு அச்சத்தினை உண்டாக்கும் இடியைக் குறிக்கிறது. இங்கு உரும் என்னும் சொல் வினையடையாக இடம்பெற்றுள்ளது.

போர்க்களத்தில் ஒப்பனை செய்யப்பட் பெரிய பிடரியைக் கொண்ட யானைகள் படைகளின் தாக்குதலால் புண்பட்டு இடி விழுந்து தாக்கிய பாம்பினைப் போல புரண்டது என்பதை,

"பருமப் பணைஎருத்தின் பல்யானை புண்கூர்ந்து
உரும்எறி பாம்பின் புரளும் - செருமொய்ம்பின்
பொன்ஆர மார்பின், புனைகழற்கால், செம்பியன்,
துன்னாரை அட்ட களத்து."(களவழி நாற்பது, 38)

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. உரும் என்னும் சொல் அச்சம் தரும் இடியினைக் குறிக்கும் பொருளில் கையாளப்பட்டுள்ளது. இப்பாடலில் உரும் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது. உரிச்சொல் நிகண்டு, இடி என்னும் சொல்லுக்குரிய பொருளாக உரும் என்னும் சொல்லை குறிப்பிடுகிறது என்பதை,

"வெடி யசனி செல் விண்ணேறு உரும்
இடியின்பேர்" (ச.வே.சுப்பிரமணியன் (பதி.ஆ) ;தமிழ் நிகண்டுகள்(தொகுதி-1);ப-195)

என்னும் வெண்பா யாப்பு வழி அறியலாம். இடி சத்தம் கேட்டவுடன் அச்சம் வரும் என்பதால் உருமென்னும் சொல்லுக்கு இடியென்னும் பொருளினை உரையாசிரியர்கள் கையாண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

போர்க்களத்தில் வீரர்கள் வெட்டிய யானையின் துதிக்கைகள் துடித்துப் புரள்வது, இடியொலி கேட்ட பாம்புகள் துடித்துப் புரள்வது போல் இருந்தது என்பதை,

"நிரைகதிர் நீள் எஃகம் நீட்டி, வயவர்
வரைபுரை யானைக் கைநூற – வரைமேல்
உரும்எறி பாம்பின் புரளும் - செருமொய்ம்பின்
சேய்பொருது அட்ட களத்து." (களவழி நாற்பது, பா.13)

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. இப்பாடலில் உரும் என்னும் சொல் இடியினைக் குறிக்கிறது. இப்பாடலிலுள்ள உரும்எறி பாம்பின் என்னும் வரியில் உரும்எறி என்னும் சொல்லுக்குப் பின் பாம்பு என்னும் பெயர்ச்சொல் இடம்பெற்றுள்ளதால் அது பெயரடையாகும்.

போரில் அரசரோடு பட்டத்து யானைகள் வீழ்ந்து கிடக்கும் காட்சி சிங்கத்தோடு மலைகள் இடியால் சிதறுண்டு வீழ்ந்து கிடப்பதைப் போல் உள்ளன என்பதை,

"செவ்வரைச் சென்னி அரிமானோடு அவ்வரை
ஒல்கி உருமிற்கு உடைந்தற்றால் - மல்கிக்
கரைகொன்று இழிதரும் காவிரி நாடன்
உரைசால் உடம்பிடி மூழ்க, அரசோடு
அரசுஉவா வீழ்ந்த களத்து." (களவழி நாற்பது, பா.35)

என்னும் இவ்வரிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. இப்பாடலில் உரும் என்னும் சொல் அச்சப்பொருளில் (இடி) வந்துள்ளது. இங்கு உருமிற்கு என்னும் சொல் வினையெச்சமாக இடம்பெற்றுள்ளது. தற்காலத்தில் உரும் என்னும் உரிச்சொல் வழக்கிழந்து விட்டது. உரும் என்னும் சொல் இடி என்னும் பொருளினைக் குறிப்பதாக உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இடி இடிக்கும் சத்தத்தைக் கேட்டவுடன் அச்ச உணர்வு அனைவருக்கும் ஏற்படுகிறது. அதனால், இங்கு உரும் என்னும் சொல் அச்சப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

வ,எண்	உரிச்சொல்	பாடல் வரி	பொருள்	வருமிடம்
1.	உரும்	"அங்கண் விசும்பின் **உருமெ**றிந்(து) எங்கும்" (பா-06)	அச்சம் தரக்கூடிய இடி	வினையடை
2.		"**உரும்**எறி பாம்பின் புரளும் – செருமொய்ம்பின்" (பா-38)		பெயரடை
3.		**"உரும்**எறி பாம்பின் புரளும் – செருமொய்ம்பின்" (பா-13)		பெயரடை
4.		"ஒல்கி **உருமி**ற்கு உடைந்தற்றால் – மல்கிக்" (பா-35)		வினையெச்சம்

உரும் என்னும் உரிச்சொல் களவழி நாற்பது பாடலில் வருமிடங்களையும், அச்சொல் உணர்த்தும் பொருளினையும் மேற்கண்ட அட்டவணை வழி அறிய முடிகிறது.

முடிவுரை

இசை, குறிப்பு, பண்பினை அடிப்படையாகக் கொண்டு ஒரு சொல் பல பொருளைப் பெற்றும் பலசொல் ஒரு பொருளைப் பெற்றும் பெயர், வினைகளைச் சார்ந்து செய்யுளுக்கு உரியவையாய் வருவது உரிச்சொல்லாகும்.

உரும் என்னும் குறிப்பு உரிச்சொல் களவழி நாற்பதில் நான்கு பாடல்களில் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியர் கூறியவாறு அச்சப் பொருண்மையில் உரும் என்னும் சொல் களவழி நாற்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரும் என்னும் உரிச்சொல் பாடலில் வரும் போது ஓரிடத்தில் வினையடையாகவும் இரண்டு இடங்களில் பெயரடையாகவும் மற்றொரு இடத்தில் வினையெச்சமாகவும் பயின்று வந்துள்ளது.

தற்காலத்தில் உரும் என்னும் சொல் (உருமி மேளம், ஏன் இவ்வாறு உருமிக்கிட்டே இருக்க?) சத்தத்தினைக் குறிக்கும் வகையில் பயன்பாட்டில் உள்ளது.

துணைநூற் பட்டியல்

1) இராசகோபால்.து, களவழி நாற்பது மூலமும் தெளிவுரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை.
2) இராசாராம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும் (மூன்றாம் பகுதி), முல்லை நிலையம், சென்னை, 1995.
3) கந்தையா.ந.சி, ந.சி.கந்தையா அகராதிகள் -1, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு:2014.
4) சுப்பிரமணியன், ச.வே., பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும், முதற்பதிப்பு : 21, மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை , ஜூன் 2010.
5) சேனாவரையர் (உரை), தொல்காப்பியம் (சொல்லதிகாரம்), சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.